செ.வெ.எண்-02 நாள்-01.12.2020

# பத்திரிக்கைச் செய்தி.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மக்களின் சமூகப்பொருளாதார நிலையினை மேம்படுத்தும் வகையில், பல்வேறுகடன் உதவி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சிறுகடன் வழங்கும் திட்டத்தின் கீழ் சுய உதவிக்குழு தொடங்கி 6 மாதங்கள் பூர்த்திசெய்த சுய உதவிக்குழுமகளிர் / ஆடவர் உறுப்பினர் ஒருவருக்கு அதிக பட்ச கடன் தொகையாக ஏற்கனவே **சுய உதவிக்குழுகடன் திட்டம்-1-ல் வழங்கப்பட்டு வந்த கடன் தொகை ரூ.50,000/- திலிருந்து ரூ.1,00,000/- ஆகவும் சுய உதவிக்குழுகடன் திட்டம்-2-ல் ரூ.1,00,000/- திலிருந்து ரூ.1,50,000/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.** பெண்கள் குழுக்களுக்கு 4% மற்றும் ஆடவருக்கு 5% ஆண்டு வட்டி விகிதத்தில் வழங்கப்படுகிறது. மேற்படி சுய உதவிக்குழு மகளிர் திட்ட, திட்ட அலுவலரால் தரம் (GRADING) செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

மேற்படி டாப்செட்கோ கடன் பெறுவதற்கான விண்ணப்பங்கள் இலவசமாக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் / கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் கூட்டுறவுகடன் சங்கங்கள் / வங்கிகள் ஆகிய இடங்களில் வழங்கப்படுகிறது. பூர்த்தி செய்யப்பட்ட கடன் விண்ணப்பங்களை விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள உரிய ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் / கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் கூட்டுறவுகடன் சங்கங்கள் / வங்கிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

டாப்செட்கோ சுய உதவிக்குழுக்களுக்கான திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மக்கள் கடன் பெற்றுபயன்பெறுமாறு மாவட்டஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**